செ.வெ.எண்: 589 பத்திரிக்கை செய்தி நாள்: 01/09/2016

## கால்நடை பராமரிப்புத்துறை

### "இலாபகரமான கால்நடை வளர்ப்பிற்கு அரசு மானியத்துடன் கூடிய தீவனப்பயிர் அபிவிருத்தி திட்டம் 2016-17"

கிராமப்புற பொருளாதாரத்தின் அடிநாதமான கால்நடை செல்வங்களின் பசுந்தீவனம் என்பது கால்நடைகளின் இனப்பெருக்கம் மற்றும் பால் உற்பத்திக்கு இன்றியமையாத ஒன்றாகும். ஆண்டு முழுவதும் கால்நடைகளுக்கு பசுந்தீவனம் குறைவில்லாமல் கிடைப்பதற்கு ஏதுவாகவும் கால்நடை வளர்ப்போரின் பசுந்தீவன உற்பத்தித் திறனுக்கு தீவனம் மற்றும் பசுந்தீவனம் மிகவும் இன்றியமையாத காரணிகள் ஆகும். பால் உற்பத்தியில் புதிய தொழில் நுட்பங்களை ஊக்கப்படுத்தும் வகையிலும், தமிழக அரசு கடந்த ஐந்து ஆண்டுகளாக மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. தற்போது நடப்பு நிதியாண்டில் அரசு மானியத்துடன் திட்டங்களை கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்படவுள்ளது.

'இறவையில் அதிக மகசூல் தரக்கூடிய கம்பு நேப்பியர் பசுந்தீவன ஒட்டுப்புல் சாகுபடி செய்திட 4000 புல் கரணைகள் பயிரிடுவதற்கு மானியமாக ரூ.2000/- வழங்குதல், மானாவரியில் தீவனச் சோளம் மற்றும் தீவனத் தட்டைப்பயறு சாகுபடி செய்திட தீவன விதைகள் வழங்குதல் மற்றும் கால்நடைகளுக்கான அடர் தீவன அசோலா திடல் அமைத்திட 100 சதம் மானியத்துடன் இடுபொருட்கள் வழங்கப்படும். மேலும் கால்நடைகளுக்கு தீவனப்பற்றாக்குறை காலங்களில் வழங்குவதற்கு ஊறுகாய்புல் தயாரித்திட சைலேஜ் பைகள் 100 சதவீத மானியத்துடன் இலவசமாக வழங்குவதோடு அகத்தி வகை மரக்கன்றுகள் சாகுபடி செய்திட 100 சதவீத மானியத்துடன் அகத்தி விதைகள் விநியோகம் செய்யப்படும்'.

மேற்காணும் திட்டங்களின் மூலம் பயன்பெற விருப்பமுள்ள கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள கால்நடை உதவி மருத்துவர் மற்றும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க பொது மேலாளரை நேரில் தொடர்பு கொண்டு பயன்பெற விருப்பமுள்ள திட்டங்களை குறிப்பிட்டு எழுத்து மூலமாக விண்ணப்பம் அளித்து பயன்பெறும்படி கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்கிறார்.

துணை இயக்குநர்,
கால்நடை பெருக்கம் மற்றும்
தீவன அபிவிருத்தி,
நாகர்கோவில்.

மண்டல இணை இயக்குநர்,
கால்நடை பராமரிப்புத்துறை
கன்னியாகுமரி.
(இ)நாகர்கோவில்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்
நாகர்கோவில்.

வெளியீடு:
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நாகர்கோவில்